JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW-   -Pw- 6- Witness
for Prosecution

CC.No. 134/2025   Crime No. -   Station -

| | | | |
|---|---|---|---|
| Name | PW.6 சத்தியமூர்த்தி | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 16.06.2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் பரதநல்லூர் ரைஸ் மில் மேட்டில் குடியிருந்து கொண்டு கட்டிட வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. சுமார் 1 ½ வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் 03.00 மணியளவில் ரைஸ் மில் மேட்டில் உள்ள எனது வீட்டில் நான் மதிய உணவு அருந்தி கொண்டிருந்தேன். அப்போது வெளியில் சத்தம் கேட்டது. வெளியே வந்து பார்த்தபொழுது, இரண்டு இரு சக்கர வாகனங்கள் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து நடைபெற்ற பிறகுதான் பார்த்தேன். அதனால் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. பின்னர் அங்கிருந்தவர்களின் உதவியுடன் காயம் பட்டவர்களை ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். வழக்கு தொடர்பாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன்**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை—**

கடந்த 18.01.2025 தேதியன்று மதியம் சுமார் 03.00 மணியளவில் நான் எனது வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்ததாகவும், அப்பொழுது ஹீரோ டீலக்ஸ் பைக்கில் ஒருவர் பைக்கை ஓட்ட பின்னால் ஒருவர் அமர்ந்து கொண்டு தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து வலது புறமாக உள்ள சன்னியாசிப்பட்டி பிரிவிற்கு செல்வதற்காக

RAJKUMAR J   Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.16 17:22:21 +0530

இண்டிகேட்டரை போட்டு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ரோட்டை கடந்த பொழுது, அதே ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த டியூக் பைக் வேகமாக வந்து மேற்படி டீலக்ஸ் பைக்கின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டதாகவும், அந்த விபத்தை நான் நேரில் பார்த்ததாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.16 17:22:27 +0530

Sd/- (J.RAJKUMAR)

**Judicial Magistrate No.1, Bhavani**